பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

மங்கையரின் அங்கமெல்லாம்
தங்க நகைகளால் மின்னிப்
பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1621)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 15 புதன்கிழமை 28-03-2001 தொலைபேசி: 3378 ஒலி: 99

## யுத்த விமானம் - அதிநவீன ஆயுதங்கள் மூலம்
# மட்டக்களப்பில் புலிகளின் முகாம்
# எந்த நேரத்திலும் தாக்கப்படலாம்!

### துண்டுப்பிரசுரம் மூலம் படையினர் அறிவிப்பு
### மக்கள் மத்தியில் பதட்டம், பீதி

(மட்டக்களப்பு விசேட நிருபர்)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டுள்ளனர்.**

**விடுதலைப் புலிகளின் முகாம் அமைந்துள்ள இடங்களில் இருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்திற்கு பொது மக்கள் எவரையும் குடியிருக்க வேண்டாம் என மட்டக்களப்பு இராணுவத்தின் 23வது படையணி துண்டுப் பிரசுரங்கள் மூலம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

மட்டக்களப்பு இராணுவத்தினரின் 23 ஆவது படையணியினரால் விநியோகிக்கப்பட்டுள்ள இத் துண்டுப் பிரசுரங்கள் செய்தி ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

உண்மைக்குப் புறம்பான 'ஈழ நாட்டிற்கான' கனவு கண்டு கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக பாரிய தாக்குதல் ஒன்றை படையினர்தொடுக்க உள்ளனர்;

அதி நவீன போர் ஆயுதங்கள், நவீன ரக குண்டு வீச்சு விமானங்கள் சகிதம் விடுதலைப் புலிகளின் முகாம்கள், பாசறைகள் மீது தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இராணுவத்தினரிடம்சரணடைந்த புலி உறுப்பினர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### ரியூட்டறிக்குச் சென்ற
### பாடசாலை மாணவியை
### காணவில்லை எனப்புகார்

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்விநிறுவனத்திற்கெனச் சென்றமாணவி ஒருவர் வீடுதிரும்பவில்லை என மந்திகையில் அமைந்துள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் அவரது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது;

விக்கினேஸ்வரா வீதி கரணவாய் கிழக்குகரவெட்டி என்ற முகவரியைச் சேர்ந்த கந்தசாமி சுசீந்திரராணி (வயது18)என்ற க.பொ.த (உ/த)வகுப்புமாணவியேகடந்ததிங்கள்முதல் காணாமல் போய்விட்டதாக தெரிவிக்கப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### தனியார் பஸ்ஸில்
### 11.கி. வெடிமருந்து மீட்பு
### 15 பயணிகள் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பில் இருந்து கொழும்புவந்த தனியார் பஸ்வண்டிஒன்றில் 11கிலோ எடையுள்ள வெடிமருந்துப் பொருள் பொலிசாரினால் மீட்கப்பட்டுள்ளது.

சுமார்15பயணிகள வந்த இந்த பஸ்வண்டியை சோதனைச் சாவடியில் பொலிசார் பரிசோதனை செய்தபோது சாரதியின் ஆசனத்திற்குப் பின்னால்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### பத்திரிகையாளர்
### திருச்செல்வம் 30ம் திகதி
### விடுதலை செய்யப்படுவார்

(கொழும்பு)

கொழும்பில் புலனாய்வுத் துறையினரால் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள் பத்திரிகையாளர் ஏ. என். எஸ். திருச்செல்வத்தை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளதாக சட்டத்தரணியும் யாழ். மாவட்ட எம். பியுமான அ. வினாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்;

உறவினர் ஒருவரின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதற்காக கொழும்பு சென்றவேளையில் திருச்செல்வம் கடந்தவருடம் டிசம்பர் மாதம் 2ம் திகதி பயங்கர

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சமாதானப் பேச்சுக்கான திகதியை
## புலிகள் உடன் அறிவிக்க வேண்டும்!
### அமைச்சர் ஜயரட்ணா கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து அறிவித்துவருகின்ற போதும் சமாதானப்பேசசுக்களை ஆரம்பிப்பதுகுறித்து எந்தவிதமான அறிவிப்பையும் இதுவரை அறிவிக்க வில்லை என்று பொதுஜனஐக்கியமுன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம் ஜயரட்ணா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும்தெரிவித்திருப்பதாவது சமாதனப்பேச்சுவார்த்தையை ஆரப்பிப்பதற்கான திகதியை விடுதலைப்புலிகளே அறிவிக்கவேண்டும். விடுதலைப்புலிகள் உண்மைத் தன்மையைப்புரிந்து கொளள முடியாபல் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முன்யுத்தநிறுத்தத்தை

→ 8ஆம் பக்ாம் பார்க்க

## விடுதலைப் புலிகளுக்கான ஆதரவு
## அமெரிக்காவில் அதிகரிக்கிறது

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகளை அமெரிக்கா தடை செய்தது குறித்து அந் நாட்டில் உள்ள பல்வேறு மனித உரிமை அமைப்புகள் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் விடுதலைப்புலிகள்மீது அமெரிக்க மக்களின் ஆதரவு பெருகி வருவதாக சர்வதேச செய்தி ஏஜென்சி ஒன்று தகவல்வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளை அமெரிக்க அரசு தடை செய்தமையால், அவர்கள் மீதான அனுதாபமும் ஆதரவும் அமெரிக்க மக்களிடையே அதிகரித்துவருகிறது. இந் நிலைமை நீண்டு சென்றால் விடுதலைப் புலிகள் மீதான அமெரிக்காவின் தடை நீக்கப் படும் நிலைமை உருவாகலாமென அமெரிக்க ஆய்வாளர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதே வேளை அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் கலின் பவல் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை ஒரு பிழையான இராஜ

→ 8ஆம் பக்கம் பார்க்க்

### வட.கி.மாகாணத்திலுள்ள
### பதவி வெற்றிடங்களை நிரப்ப
### அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் அரச பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார். வடக்குக் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் அரச பதவி வெற்றிடங்கள் பல நீண்ட காலமாகவே நிரப்பப்படாமல் உள்ளது,இவ் வெற்றிடங்களை உடனடியாக நிரப்பும்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவை

→ 8ஆம் பக்கம் பார்க்க

### நீதிமன்ற கட்டடத்தொகுதி
### பார்வையிட குழு வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நீதிமன்றக்கட்டடத் தொகுதிஅமைப்பதுதொடர்பாகவும், சிறைச்சாலை அமைப்பது தொடர்பாகவும், அவற்றுக்குரிய இடங்களைப் பார்வையிடுவதற்கு10 பேர் கொண்ட குழு ஒன்று நேற்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளது:

இக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைக்கும் இடத்தையும் பார்வையிட்டதுடன் மல்லாகம் நீதிமன்றத்தையும் சென்று பார்வையிட்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### மாணவனை
### காணவில்லை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த வரதராஜா சுதாகரன் என்ற மாணவனைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணவில்லையென்று மேற்படி மாண

→ 8ஆம் பக்கம் பார்க்க

### வ.கி.வைத்திய சாலைகளுக்கு
### 110 லட்சம்ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்குகிழக்கு மாகாணத்தில் உள்ளவைத்திய சாலைகளுக்குவேண்டிய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக சுகாதார அமைச்சு 110லட்சமரூபாவை ஒதுககியுள்ளது.

வைத்திய சாலைகளுக்கு வேண்டிய தளபாடம் மற்றும் உபகரணங்கள் தொடர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மார்ச் மாதம் 25ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றது.

### கோப்பாய்

| | |
|---|---|
| 163'00 ஏ | 166282 ஏ |
| 185947 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 168877 ஏ | 168877 பி |
| 168877 சி | 168877 டி |
| 173305 ஏ | 175624 ஏ |
| 178278 ஏ | 178278 பி |
| 178278 சி | 180197 ஏ |
| 181770 ஏ | 181770 ஏ |
| 181770 சி | |
| 181814 பி | 181814 சி |
| 181836 பி | 181836 ஏ |
| 181836 டி | 181836 சி |
| 181850 பி | |
| 181850 ஏ | 181836 ஈ |
| 184349 ஏ | 184349 பி |
| 184349 சி | 184349 டி |
| 184349 ஈ | 184424 ஏ |
| 184424 பி | 184550 ஏ |
| 184550 பி | 184603 ஏ |
| 184657 ஏ | 184657 பி |
| 184657 சி | 184779 ஏ |
| 184782 ஏ | 184782 பி |
| 185834 ஏ | 185834 பி |
| 185855 ஏ | 185855 பி |
| 185949 ஏ | 186019 ஏ |
| 186053 ஏ | 186053 பி |
| 186053 சி | 186053 டி |
| 186132 ஏ | 186132 பி |
| 186132 சி | 186169 ஏ |
| 186189 ஏ | 186319 ஏ |
| 186319 பி | 186398 ஏ |
| 188815 ஏ | 188815 பி |
| 179017 ஏ | 179017 பி |
| 183435 ஏ | 183435 பி |
| 186911 ஏ | 186911 பி |
| 186911 சி | 186938 ஏ |
| 186954 ஏ | 187112 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 179196 ஏ | 183421 ஏ |
| 183421 பி | 185121 ஏ |
| 185132 ஏ | 185132 பி |
| 186907 ஏ | 186964 ஏ |
| 186964 பி | 186968 ஏ |
| 186968 பி | 187014 ஏ |
| 187031 ஏ | 187031 பி |
| 187031 சி | 187059 ஏ |
| 187059 பி | 187060 ஏ |
| 187060 பி | 187091 ஏ |
| 187185 ஏ | 187188 ஏ |
| 1877176 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 185161 ஏ | 185161 பி |
| 186929 ஏ | 187111 ஏ |
| 187111 பி | |

### உடுவில்

| | |
|---|---|
| 151990 ஏ | 176046 ஏ |
| 176608 ஏ | 176608 பி |
| 176608 சி | 183170 ஏ |
| 183170 பி | 183170 சி |
| 183170 டி | 184838 ஏ |
| 184973 ஏ | 185291 ஏ |
| 186793 ஏ | 186793 பி |
| 186945 ஏ | 187002 பி |
| 187045 ஏ | 187145 ஏ |
| 187145 பி | |

மார்ச் மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகிறது;

### சங்கானை

| | |
|---|---|
| 131751 ஏ | 166885 ஏ |
| 179330 ஏ | 179330 பி |
| 179330 சி | 183247 ஏ |
| 184935 ஏ | 185071 ஏ |
| 185272 ஏ | 185272 பி |
| 185306 ஏ | 185306 பி |
| 185872 ஏ | 185872 பி |
| 186729 ஏ | 186729 பி |
| 186778 ஏ | 186778 பி |
| 186822 ஏ | 186822 பி |
| 186846 ஏ | 186846 பி |
| 186846 சி | 186846 டி |
| 187004 ஏ | 187051 ஏ |
| 187133 ஏ | 187136 ஏ |
| 187201 ஏ | 187201 டி |
| 187204 ஏ | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 171367 ஏ | 172207 ஏ |

### கரவெட்டி

| | |
|---|---|
| 171354 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 171318 ஏ | 177233 ஏ |
| 177233 பி | 177330 ஏ |
| 177331 ஏ | 180794 ஏ |
| 180856 ஏ | 180895 ஏ |
| 180909 ஏ | 180936 ஏ |
| 180936 பி | 180957 ஏ |
| 180957 பி | 180987 ஏ |
| 181001 ஏ | 181034 ஏ |
| 181038 ஏ | 181038 பி |
| 181038 சி | 182893 ஏ |
| 182893 பி | 182928 ஏ |
| 182928 பி | 182940 ஏ |
| 182940 பி | 182943 ஏ |
| 182943 பி | 183000 ஏ |
| 183000 பி | 183021 ஏ |
| 183021 பி | 183021 சி |
| 184209 ஏ | 186331 ஏ |
| 186337 ஏ | 186356 ஏ |
| 186362 ஏ | 186395 ஏ |
| 186433 ஏ | 189542 ஏ |
| 186542 பி | 186543 ஏ |
| 186543 பி | 186544 ஏ |
| 186544 பி | 186544 சி |
| 186574 ஏ | 186582 ஏ |
| 186600 ஏ | 186604 ஏ |
| 186604 பி | 186640 ஏ |
| 186640 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 156916 ஏ | 171001 ஏ |
| 171011 ஏ | 171033 ஏ |
| 171497 ஏ | 177165 ஏ |
| 179600 ஏ | 179600 பி |
| 179725 ஏ | 179235 ஏ |
| 179735 பி | 179775 ஏ |
| 179783 ஏ | 179795 ஏ |
| 179795 பி | 184128 ஏ |
| 184128 பி | 184153 ஏ |
| 184153 பி | 184166 ஏ |
| 184166 பி | 184199 ஏ |
| 184199 பி | 184199 சி |
| 184247 ஏ | 184248 ஏ |
| 184316 ஏ | 184317 ஏ |
| 172207 பி | 172207 சி |
| 172207 டி | 172207 ஈ |
| 172207 எப் | 172207 ஜி |
| 174835 ஏ | 179306 ஏ |
| 179306 பி | 179307 ஏ |
| 181600 ஏ | 181600 பி |
| 183279 ஏ | 183279 பி |
| 184286 ஏ | 185286 பி |
| 186749 ஏ | 186749 பி |
| 186961 ஏ | 186961 பி |
| 187038 ஏ | 187038 பி |
| 187048 ஏ | 187049 ஏ |
| 177074 ஏ | 187092 ஏ |
| 187115 ஏ | 187175 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 171496 ஏ | 158528 ஏ |
| 158528 பி | 158528 சி |
| 158528 டி | 182602 ஏ |
| 183187 ஏ | 183187 பி |
| 183411 பி | 183441 சி |
| | 183441 ஏ |
| 185136 ஏ | 185197 ஏ |
| 185197 பி | 185197 சி |
| 185197 டி | 185240 ஏ |
| 185281 ஏ | 185281 பி |
| 186246 ஏ | 186258 ஏ |
| 186786 ஏ | 186828 ஏ |
| 186845 ஏ | 186925 ஏ |
| 187030 ஏ | 187030 பி |
| 187030 சி | 187073 ஏ |
| 187078 ஏ | 287163 ஏ |
| 187164 பி | 187164 ஏ |
| 187164 பி | 187165 ஏ |
| 187168 ஏ | 187169 ஏ |
| 187189 ஏ | 187189 பி |
| 187190 ஏ | 187190 பி |
| 187190 சி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 183048 ஏ | 183048 பி |
| 183048 சி | 183048 டி |
| 183048 ஈ | 183048 எப் |
| 183408 ஏ | 185049 ஏ |
| 187084 ஏ | 187084 பி |
| 187084 சி | 1887224 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 179803 ஏ | 179083 பி |
| 179807 ஏ | 179807 பி |
| 184131 ஏ | 184131 பி |
| 184131 சி | 184236 ஏ |
| 184236 பி | 184236 சி |
| 184256 ஏ | 184256 பி |
| 176686 ஏ | 186686 பி |
| 1803'9 ஏ | 181590 ஏ |
| 181590 பி | 182821 ஏ |
| 185169 ஏ | 185169 பி |
| 185296 ஏ | 186740 ஏ |
| 186740 பி | 186757 ஏ |
| 186757 பி | 186757 சி |
| 186759 டி | 186759 ஏ |
| 186780 ஏ | 186780 பி |
| 186780 சி | 186839 ஏ |
| 186861 ஏ | 187058 ஏ |
| 187139 ஏ | |

# வன்னிப்பகுதிவைத்தியசாலைகளில் காலாவதியான மருந்து விநியோகம்

## ரெலோ எம் பி நாடாளுமன்றில் குற்றச்சாட்டு

[கொழும்பு]
வன்னிப்பகுதி வைத்திய சாலைகளில் காலம் கடந்த மருந்து வகைகள் நோயாளர்களுக்கு விநியோகம் செய்யப்படுவதாக ரெலோ அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜா குகனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சுகாதார அமைச்சின் வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டவேளை இது விடயத்தை வெளிக் கொணர்ந்த அவர்,

இந் நிலைமைகளைப் போக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டுகோள் விடுத்ததுடன்,

பல மில்லியன் ரூபா செலவில் மேற்படிபகுதியில் வைத்தியசாலைகளுக்கு கட்டடங்கள் அமைக்கப் படுகின்ற போதிலும்,வேண்டிய வைத்தியர்களும் உரிய மருந்துகள்இன்மையால் ஏந்தவொரு பயனும் ஏற்படாத நிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டினார். [உ]

## உயர்தர மாணவர் கவனத்திற்கு

(துன்னாலை)
தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த இவ்வாண்டு க.பொ.த(உ/த)பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் உடன் தத்தமது பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-41)

## இராசி பலன்

28.3.2001
(பங்குனி 15 புதன்)
திருதியை மு.ப 8:16 வரை
பரணி மு.இ 84:9 வரை
ராகு காலம்-12.14- 1.44
சுப நேரம்- 4.44- 6 14
சித்தாமிர்தம்

**மேடம்**
ஜனவசியம், பெரியோர், ஆசி, காரிய சித்தி, ஆழ்ந்த சிந்தை.

**இடபம்**
சயனசுகக் குறைவு காரிய அலைச்சல், சுப செலவு, மனக்குழப்பம்;

**மிதுனம்**
நினைத்த காரியம் கைகூடும், தனலாபம், தெய்வ தரிசனம்,நண்பர்கள் உதவி.

**கடகம்**
சுப நிகழ்ச்சி, உத்தியோக மேன்மை, காரிய நன்மை, நல்லசெய்தி;

**சிங்கம்**
வயிற்றுக் கோளாறு. சுதந்திரக் குறைவு, முயற்சி தாமதம், பயந்த சுபாவம்.

**கன்னி**
எதிர்பாராத பிரச்சினை, பகைவர் தொல்லை, காரியத் தடை,வியாதி.

**துலாம்**
காரிய அனுகூலம், களஸ்திர சுகம், விருந்துபசாரம், பிரயாணம்.

**விருச்சிகம்**
முயற்சி கைகூடும்,இலட்சுமிகரம், நோய் குணமடைதல், பகைவர் விலகுவர்;

**தனு**
ரோகம், மனக்கிலேசம், முயற்சி தாமதம், வியாபார மேன்மை;

**மகரம்**
தொழில் நன்மை, தன்னம்பிக்கைக் குறைவு, மனச்சஞ்சலம், காரிய தாமதம்.

**கும்பம்**
பிரயாணம், சென்ற இடத்தில் செல்வாக்கு, சகோதரர் உதவி,வாக்கு மேன்மை.

**மீனம்**
விதண்டாவாதம், காரிய தாமதம்.கௌரவக் குறைவு, தன விரயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## சுருக்கெழுத்துப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம், தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் அனுசரணையுடன் ஒரு வருட கால தமிழ் ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சியினை 16.04.2001 முதல் ஆரம்பிக்கவுள்ளது.

இப்பயிற்சியைப் பெறவிரும்பும், பாடசாலையை விட்டு விலகிய க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவத்தினையும் விபரங்களையும் 10.04.2001 ற்கு முன் வதிரியில் உள்ள பயிற்சி நிலையத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

பயிற்சியைப் பெறுவர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படும் என கழகச் செயலாளர் தெரிவித்துள்ளார். (உ)

## சிலை நிறுவப்பட்டது

அமலமரித் தியாகிகள் சபையின் நிறுவுநர் ஈயூஜின் டிமார்சினட்டின்,ஆறடி உயர உருவச்சிலை ஒன்று கொழும்புத்துறை அமல மரித்தியாகிகள் பயிற்சியகத்தில் அண்மையில் நிறுவப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மண்ணில் அமலமரித்தியாகிகள் 150 ஆண்டுகளாக பணியாற்றியதை நன்றியோடு நினைவு கூர்ந்து இச்சிலையை அருட்தந்தை ஜீவாப்போல் நிறுவியுள்ளார். (உ-110(

## தலையில் காயம்

நாய்க்குப் பயந்து ஓடிய பாடசாலை மாணவி தடக்குண்டு வீழ்ந்து தலையில் காயமடைந்த நிலையில் யா!போதனாவைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்

2 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சை மேரிதர்ஷி (வயது 13) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-10)

## நிர்வாகக்குழுத் தெரிவு

(யாழ்ப்பாணம்
கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையின வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின் வருவோர் நிர்வாகக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்;

தலைவர்,கு.கைலாயபதி உப தலைவர்கள்,க.மகேசன் செ.குகதாசன்,செயலாளர் வ,பரமவசிம்,உப செயலாளர் எஸ் பத்மராஜா, பொருளாளர் இ தணிகைநாதன் மற்றும் 5 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

## விண்ணப்பம் அனுப்பவும்

(யாழ்ப்பாணம்)
யாழ்.பிராந்திய மாகாணப் பிரதிப்பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தின்படி சுகாதாரத் தொழிலாளர்களிடமிருந்து, குடும்பசுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு உதவியாளராகச் சேவையாற்றுவதற்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

2 4. 2001 இற்கு முன் விண்ணபத்தை அனுப்பி வைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## ஆலய தரிசனம்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் கடந்த வாரம் மானிப்பாய் மருதடி விநாயகர், மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலய, தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானம், கந்தரோடை கயற்கண்ணி ஆகிய தெய்வீகத் தலங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டனர்;

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியைச் சந்தித்து அவரின் ஆசிகளையும் பெற்றுக் கொண்டனர். [உ-106]


## வெளிவருகிறது
## ஆசிரியத் தொழில்

நா.] வரதராசா SLEAS

நூலின் விலை ரூபா 110/-



## தேவை

செய்தியாளர் ஒருவருக்கு பெண் உதவியாளர் தேவை

G. C; E; (O/L) சித்தியடைந்தவராகவும் யாழ்; மாநகர எல்லைக்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

இல: 61. ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(கி-1702)

# பகிடிவதைக்கு முடிவு தேடிய முன்னோடிகள்

# யாழ். கல்வியியற் கல்லூரிமாணவர்கள்

## நல்லூர் பி. ச. தலைவர் மணிபல்லவராஜன் புகழாரம்

[யாழ்ப்பாணம்]

பகிடிவதை என்ற அரக்கன் எம்முள் புகுந்து எம் வேதனையை அதிகரித்து, கலாசார பண்பாட்டுச் சிந்தனைச் சிறப்பினை எம்மிடமிருந்து பிரித்து வருகிறான்.

பண்பாட்டு ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் உயர்வடைந்து, தனிச் சிறப்புக் கொண்ட எம்மிடையே இவ் இழி செயலா என மனம் புழுங்கினோம்.

இதற்கெல்லாம் ஆறுதல் அளிப்பதாக, எம் மக்களுக்கு உற்சாகம் தருவதாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட மாணவரின் நடவடிக்கை அமைந்துள்ளது.

இது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. அன்று பெற்றோர்கள் முன்னிலையில் உறுதி கூறியவாறே மாணவர்களாகிய நீங்கள் நடந்தீர்கள் மகிழ்ந்தீர்கள்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட மாணவர்கள் பண்பான முறையில் புதுமுக மாணவர்களை வரவேற்று உபசரித்தமையைப் பாராட்டிப் பரிசில் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் மேற்படி கல்லூரியில் இடம்பெற்றது.

அந் நிகழ்விற்குத் தலைமை வகித்துப் பேசிய நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் கட்சியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளருமான க. மணிபல்லவராஜன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

பகிடிவதை என்ற அரக்கன் மாணவர்களாகிய உங்களிடமிருந்து விலகிவிட வேண்டும். இதற்கு எடுத்துக் காட்டாக நீங்கள் நடந்து காட்டியுள்ளீர்கள்.

இந் நடைமுறை இனிவரும் புது மாணவர்களால் வழி நடத்தப்பட வேண்டும்.

இன்றைய வைபவம் மூலம் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட மாணவர்களின் உயர்வான விழுமிய செயற்பாட்டையும் அவ் விழுமிய மேம்பாட்டின் மனப்பாங்கு விருத்திக்கு வழிகாட்டிய கல்லூரியின் பீடாதிபதி மற்றும் விரிவுரையாளர்களின் சிறப்பையும் எமது சமூகம் நன்குணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டதன் முக்கிய நோக்கமும் அதுவேயாகும்.

ஆசிரியர்கள் சமூகத்தின் வழிகாட்டிகள், முன்மாதிரியானவர்கள், சமுதாயச் சிற்பிகள் அவர்களை நம்பித்தான் எதிர்கால சமூகம் உள்ளது.

அந்தவகையில் எமது சமூகத்தின் சிற்பிகளாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் உருவாகி வரும் ஆசிரியர்களின் சிறப்பான செயற்பாட்டை எமது மக்கள் சார்பாக எம்கட்சி பாராட்டுகிறது என்றார்

இந்நிகழ்வில் வலி கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.சண்முகநாதன், வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந திரிலோகநாதன் பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர்கள் மற்றும் கல்வியியற் கல்லூரி நிர்வாகத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(உ-106)

# ✤ செய்தித் துளிகள் ✤

## செயற்குழு தெரிவு

(சுண்டுக்குளி)

வடமாகாண பத்திரிகையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 25 ஆம் திகதி தலைவர் எஸ் கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்றபொழுது கீழ்க்காண்போர் நடப்பு வருடத்திற்கான ஆட்சிக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். கதிர்காமத் தம்பி,

உபதலைவர் கப்டன் டி. எ. எம். குணசிங்கம், எஸ். என். இராமச்சந்திரன்,

செயலாளர் கே. ஜீவகதாஸ்

பொருளாளர் எஸ். சற்குரு

உபசெயலாளர் எம். வாமதேவன்

செயற்குழு உறுப்பினர்கள் எஸ் தில்லைநாதன், என்.பரமேஸ்வரன், கே. தணிகாசலம், எஸ். சதீஸ், என். கண்ணன். (உ-110)

## திருப்பலிப் பூசை

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பத்திமா அன்னை ஆலயத்தில் பூசையும் திருப்பலியும் எதிர் வரும் முதலாம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பித்து மாலை 3.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு பண்டத்தரிப்பு பங்குத் தந்தை தலைமையில் நடைபெறும்.

(உ-9)

## விசேட பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கான விசேட பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை பி. ப. 2. 00 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்திற்கான மூன்றாம் வருடப் பிரதிகளைத் தெரிவுசெய்யும் முகமாக இவ் விசேட பொதுக்கூட்டம நடைபெறவுள்ளது. (உ)

## காங்கேசனுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

மனிதஉரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன் துறை தடுப்பு முகாம்சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் கடிதங்களையும் அவர் எடுத்துச் சென்று கையளிப்பார்.

அதேசமயம் கைதிகளினால் அவர்கள் உறவினர்களுக்கு வழங்கப்படும் கடிதங்களையும் அவர் எடுத்துவந்து ஒப்படைத்து வருவது தெரிந்ததே. (உ-10)

## நிர்வாகிகள் தெரிவு

(தென்மராட்சி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 2001/2002 லயனிஸ் வருடத்துக்கான தலைவராக லயன்ஸ் டாக்டர் பேர பிலிப்ஸ்சும், செயலாளராக லயன் எஸ். சிவபாலசுப்பி. மணியமும், பொருளாளராக லயன். எஸ். கே. நவரத்தினமும் தெரிவு செய்யப்பட்டுளளனர்.

(உ-77)

## தங்கராஜாவுக்கு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டில் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் வேல் முருகு தங்கராஜா மீண்டும் யாழ் மாவட்ட அமைப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டதைப் பாராட்டியும் அவரை வரவேற்றும், யாழ். கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் வரவேற்பு விழா நடைபெற்றது.

மாவட்ட பதில் அமைப்பாளர்சௌந்தரநாயகம்தலைமையில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் மக்கள் குறைகள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டது. அத்துடன் விஜய குமாரணதுங்காவின் சிலையை அமைப்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. (இ-6-43)

## வெளிமாவட்ட ஆசிரியர் 15பேர் தீவகத்தில் தற்காலிகக்கடமை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் 1999 / 2000 ஆம் ஆண்டு பயிற்சியை முடித்த வெளி மாவட்ட ஆசிரியர்கள் 15 பேருக்குதீவகப் பாடசாலைகளில் தற்காலிகக்கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆசிரியர்கள் யாழ். மாவட்டப்பாடசாலைகளில்கல்விகற்பிப்பதற் கேற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளுமாறு அமைச்சர்டக்ளஸ்தேவானந்தாவிடம் கோரிக்கைவிடுத்ததையடுத்து ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளைவிட்டு வெளியேறியதன் பின்னர் யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களத்தில்தமது வரவினை உறுதிப்படுத்தி வந்தனர்.

இருப்பினும், இவர்களது வளம் மாணவர்க்குப் பயன்படும் வகையில், நிரந்தர நியமனம் வழங்கும் வரை, ஆசிரியர் பற்றாக் குறையாகவுள்ள தீவகப் பாடசாலைகளில் தமது கடமைகளைத் தொடர வேண்டும் என்று யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனைக்கிணங்கவும், சமபந்தப்பட்ட அமைச்சரின் அனுமதியுடனும் இவ் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுளளமைகுறிப்பிடத் தக்கது. (உ-42)

## அயலவருடன் மோதல் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

அயலவருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு கைகலப்பாக மாறியதில், நெஞ்சுப்பகுதியில் தாக்கப்பட்ட நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புத்தூர் கிழக்குப் பகுதியில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நவரட்ணம (வயது-42) என்பவரே தாக்கப்பட்டவராவார். (உ-10)

## வீதி விபத்துக்களை தடுக்கும் பணியில் பாடசாலை மாணவர்

(துன்னாலை)

வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்கிலான ஒழுங்கு நடவடிக்கைகளில் வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்கள் ஈடுபடுவதை அவதானிக்க முடிகிறது.

பாடசாலை ஆரம்பிக்கும் முடிவுறும் வேளைகளில் அதனை அண்டிய பகுதிகளில் வீதி ஒழுங்குபேணும் கடமையில் மாணவர்கள ஈடுபடுத்தப்படுவதுடன்,

இந் நடைமுறைகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டதன்பின்னர் அப்பகுதிகளில் வீதி விபத்துக்கள் வெகுவாக குறைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (உ-4)

## இன்று அதிபர் கூட்டம்

[துன்னாலை]

தென்மராட்சி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம் இன்று தற்காலிகமாக இயங்கும் தென்மராட்சி வலயக்கல்விப்பணிமனையில் நடைபெறும் என தென்மராட்சி வலயக் ல்விப் பணிப்பாளர் து செல்வராசா தெரிவித்துள்ளார். [உ-4]

## இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது (உ)

## திருப்பாலத்துவ சபை தினம்

(சுண்டுக்குளி)

நாவாந்துறையில் அமைந்துள்ள புனித பரலோக அன்னை ஆலயத்தில் கடந்த வாரம் இடம் பெற்ற திருப்பாலததுவசபைதின நிகழ்வில் 150 வரையிலான பாலகர்ள் கலந்து கொண்டார்ககள்.

அன்றைய தினம் பாலகர்களுக்காக அருட்தந்தை சகாயநாயகம் அடிகளாரினால்விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. (உ-10)

## மெய்வல்லுநர் போட்டி

[செம்பியன்பற்று]

யாழ். மணற்காடு றோ.க த.க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று பி.ப 1 00 மணக்கு பாடசாலை அதிபர் சி. குருகுலலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் சிறப்பு விருந்தினராக மணற்காடு பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனி ஜோர்ஜ் ஆகியோர் கலந்து கொள்வுள்ளனர். [உ-42]

## வருடாந்த பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் 25 வது வருடாந்தப் பொதுக் கூட்டம் 31 ஆம் திகதி சனிக்கிழமை மு ப 10 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதி ஸ்ரீ காமாட்சி அம்பாள மடத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் புதிய உத்தியோகத்தர் தெரிவும் இடம் பெறவுள்ளது [உ]

## நாடகப் பட்டறை

[அரியாலை]

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த வாரம் நாடகப் பட்டறை ஒன்று நடத்தப்பட்டது.

யாழ் பல்கலைக்கழகவிரிவுரையாளர் குழந்தை ம சண்முகலிங்கம் தலைமையிலான குழுவினர் இதனை நெறிப் படுத்தினர். (உ-106)

# நல்லூர்- மாவை பிரதேசங்கள் புனித நகரங்களாகப் பிரகடனம்

## ஏற்றநடவடிக்கைகள் விரைந்து முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர், மாவிட்டபுரம் ஆகியபிரதேசங்களைப்புனித நகராகப் பிரகடனப்படுத்துவதற்கேற்ற நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகவலை நல்லூர் பிரதேசசபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிறன்று இடம் பெற்ற நல்லூர் பிரதேச சபைக்கென கொள்வனவு செய்யப்பட்ட கட்டடத் திறப்பு விழாவில்,

அறிஞர் சிலர் நல்லூர் பிரதேசத்தை புனித நகராகப் பிரகடனம் செய்ய வேண்டும் எனக் கோரிக்கைவிடுத்தனர்.

இதற்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்த பிரதேச சபைத் தலைவர்,

இதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து எடுப்பது குறித்து ஈ. பி. டி. பி அமைப்பின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும், விரைவில் சாதகமான பதில் கிடைக்குமென எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

(உ-2, 10)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல- 10

## ஆக்கம்: செல்வி

★ **பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக**

01) ஆடு+கால் ——————
02) பண்டு+காலம் ——————
03) தெற்கு+மொழி ——————
04) ஐந்து+மூன்று ——————
05) ஒன்று+ஒன்று ——————

★ **பின்வரும் எழுத்துக் கூட்டங்களில் உள்ள எழுத்துக்களைப் பொருத்தமாகச் சேர்த்து கருத்துள்ள ஐந்து சொற்கள் ஆக்குக.**

ர், ந, க, ரை, மா, து, ம

06) ——————
07) ——————
08) ——————
09) ——————
10) ——————

★ **பின்வரும் இடை வெளியில் பொருத்தமான சொல்லோ, எழுத்தோ இட்டு இரு கருத்துச் சொல் அமையுமாறு ஆக்குக.**

11) கூர் —————— முகம்
12) திரு —————— நாடு
13) கப்பல் —————— பழம்
14) கன்னித் —————— மொழி
15) இல்லை —————— மைதானம்

★ **பின்வரும் பாடலைப் படித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

'சின்னஞ் சிறுகிளியே— கண்ணம்மா செல்வக்களஞ்சியமே
என்னைக்கலிதீர்த்தே—புவியில் ஏற்றம் புரிய வந்தாய்'

16) இப்பாடலைப் பாடியவர் யார்?
17) இப்பாடலில் வர்ணிக்கப்படும் பாத்திரம் யாது?
18) இப்பாத்திரத்தை எந்த நிலையில் கவிஞர்உவமிக்கின்றார்?
19) கலி என்பதன் பொருள் யாது?
20) கவிஞர் செல்வக்களஞ்சியமாக எதனை வர்ணிக்கின்றார்?

★ **பின்வரும் சொற் கூட்டங்களில் பொருத்தமற்றதன் கீழ் கீறிடுக**

21) குறு குறு, சல சல, கட கட, அரை குறை
22) தாமரை, மலர், மல்லிகை, பழம்
23) தலை, கை, நகம், தை
24) மூன்று, ஆறு, ஏழு, ஒன்பது
25) நீலக்குயில், பச்சைக்கிளி, காகம், வெள்ளை அன்னம்

★ **பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ப்பதத்தை எழுதுக.**

26) PARROT ——————
27) LEOPARD ——————
28) SWAN
29) BAMBOO
30) ROCK

★ **பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?**

31) கடற்கரையை அண்டிய இடங்களில் நிலம் எப்படிப்பட்டதாக இருக்கும்?
32) கற்றாழை, சதுரக்கள்ளி, நாகதாளி வளரும் இடங்கள் எப்படிப்பட்ட பிரதேசங்கள்?
33) சட்டி, பானை செய்வதற்கு உகந்த மண் எது?
34) மண்ணின் கூறுகளைத் தருக?
35) நாருருவேர் காணப்படும் தாவரங்கள் மூன்றினது பெயர்களைத் தருக?

★ **பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக?**

நிகி, மகி, சுகி, அகி ஆகிய நால்வரும் விழா ஒன்றிற்கு சென்றிருந்தனர். அங்கு வடை, கேக், பிஸ்கட், வாழைப்பழம் ஆகியசிற்றுண்டிவகைகள் பரிமாறப்பட்டன. சுகி இனிப்பு பண்டங்கள் எதனையும்விரும்பவில்லை, அகிமச்சம்விரும்பவில்லை. மகி எண்ணெய்ப்பண்டம் தனக்கு ஆகாது என்றாள் நிகி, உறைப்பை விரும்பினாள்.

36) அகி உண்ட சிற்றுண்டி எது?
37) மகி உண்ட சிற்றுண்டி எது?
38) உறைப்புச் சுவையை விரும்பியவர்கள் யார்?
39) இனிப்புச் சுவையை விரும்பியவர்கள் எத்தனை பேர்?
40) ஆகக் குறைந்தது ஒரு சிற்றுண்டியை உண்டவர்கள் யாவர்?

**குறிப்பு:-**
விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 03-04-2001 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல்களை அரசு ஒத்திவைத்தமையை ஆட்சேபித்து நேற்று முன்தினம் கொழும்பில் ஜே.வி.பி யினர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைத்தமைக்கு கண்டனம் தெரிவித்து கோஷங்கள் எழுப்பினர்.

[வ]

## பாடப் பரப்பிற்குள் படிப்பது அவசியம்

கடந்த ஆறு வருடகால வினாத்தாள்களில் வந்த வினாக்கள் முழுவதும் செயற்பாட்டை மையமாகக் கொண்டே அமைந்திருந்தன.

அவற்றில் ஆரம்பவிஞ்ஞான வினாக்கள் அனைத்தும் ஆசிரியர் கைநூலில் உள்ளவையே.

ஆக்கம், அழகியல் ஆகிய பாடங்களுக்கு நாம் அதிகம் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆக்கம் என்பது மாணவனது செயல்கள், அவன் செய்யும் பொருட்கள்;

அழகியல் என்பது சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்கள் தற்பொழுதுகணிசமான வினாக்கள். ஆக்கம் அழகியல் பாடங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்படுகின்றன.

ஆங்கிலமும் ஒரு முக்கிய பாடமாக இப் பரீட்சையில் கருதப்பட்ட போதிலும் மிகவும் இலகுவாக பிள்ளைக்குப் பரிச்சயமான சொற்களே பரீட்சைக்கு வருகின்றன. அது பெரும்பாலும் தரம் மூன்று, நான்கு, ஐந்து பாடநூல்களில் இருந்தே பெறப்படுகின்றது.

இதைவிட பாடப்பரப்பிற்குட்பட்ட பொதுவானகேள்விகளும் வருகின்றன.

**'தரம் ஐந்து புலமைப் பரிசில் வினாத்தாளில் முக்கிய அம்சம் கட்டுரை ஆகும்'**

**கே. வி. குணசேகரம்**

தபால், தந்திக்கட்டணங்கள், பத்திரிகைச் செய்திகள், புலமைப் பரிசில் பரீட்சை சம்பந்தமான பொதுவான நிபந்தனைகள், தேசிய விடயங்கள் என பல தரப்பில் வினாக்கள் வந்தபோதும் பாடப்பரப்பைவிட்டு இம்மியும் பிசகாமலேயே வந்துள்ளன.

கடைசியாக கட்டுரை: இதில் தான் மாணவர்களும் ஆசிரியர்களும், பெற்றோர்களும் மூளையைக் குழப்பிக் கொள்கிறார்கள்.

பொதுவாக இவ் வினாத்தாளின் முக்கிய அம்சம் கட்டுரை தான் இதில் தான் மாணவன் தடுமாறுகிறான். எனினும் காலத்தை ஒழுங்காகப புரிந்து கொள்ளும் மாணவன்இலகுவாககட்டுரை எழுதுவான்.

## புலமைப் பரிசில் பரீட்சை வினா இல-09

### அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

1. இ. பிரதிகா சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்
2. ஸ்ரீ. சிவாத்மிகா, கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி
3. பா. சாயிசங்கர், வட்டு, யாழ்ப்பாணக் கல்லூரி
4. லூ. அலன்டியந்தா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
5. நி. திருநீபன், சாவ. இந்து ஆரம்பப்பாடசாலை
6. ஜோய் ஜெயநீற்றா, உடுவில் மகளிர் கல்லூரி
7. சி. துவாரகன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
8. பா. ராதிகா, அல்வாய் அம்பாள் வித்தியாலயம்
9. கு. கஸ்தூரி, சாவ. இந்து ஆரம்பப்பாடசாலை
10. மு. பிருந்தாவன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
11. ஆ. சோபனா, நீர்வேலி இந்துக் கல்லூரி
12. சி. சிவசொரூபன், யாழ். மத்திய கல்லூரி
13. ப. தாமரா, யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை
14. வி. கோகுலன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
15. தெ. கஜரஞ்சிதன், புலோலி புற்றளை மகா வித்தியாலயம்
16. வ. விபுசன், தட்டாதெரு மெ. மி. த. க.
17. பி. மதீசன், தேவரையாளி இந்துக் கல்லூரி
18. யோ. சிந்துஜா, வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
19. அ. கடோற்கஜன், யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை
20. த. கோபிசங்கர் புலோலி புற்றளை மகா வித்தியாலயம்
21. இ. திவாஸ்கரன், தட்டாதெரு மெ. மி. த. க. பாடசாலை
22. ர. தீபனா, தேவரையாளி இந்துக் கல்லூரி
23. ம. லவண்ராஜ், புலோலி புற்றளை மகா வித்தியாலயம்
24. ர. ரவிராஜ், தட்டாதெரு மெ. மி. த. க. பாடசாலை
25. அ. வஜீரன் யாழ். பரி யோவான் கல்லூரி
26. ட. சதீஸ் யாழ். பத்திரிசியார் கல்லூரி.
27) சி. கஜந்தினி. யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை.
28) கு. மேரியசிந்தா, யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம்
29) சி. பிரணவன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
30) பா. கௌசிகா, தாவடி இ. த. க. பாடசாலை.
31) சி. லகீசன், மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்.
32) ஏ. கஜலக்ஷி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
33) ச. அகிலன், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
34) சோ. சுகந்தினி உசன் இராமநாதன் ம. வி
35) வி. ஜெயதீபா, நயினாதீவு நாகபூசணி வித்தியாலயம்.
36) சு. பவானந்தன், புலோலி புற்றளை ம. வி
37) பு. ராஜாராம், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
38) அ. கவாஸ்கர் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி.
39) ப. திலக்ஸனா, அராலி முருகமூர்த்தி ம. வி
40) க. சாயினி, நயினாதீவு நாகபூசணி வித்தியாலயம்.
41) வி. சிறானி, வட்டு. மத்திய கல்லூரி.
42) ச. கஜலக்சனா, யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை.
43) வி. மிதிலா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
44) த. தர்மராஜ், பளை மத்திய கல்லூரி.
45) ச. பிரவீணா, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
46) த. டயானி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
47) ம. ஷாலினி, வடஇந்துமகளிர் கல்லூரி.
48) ம. மேரிறெபிக்கா, யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்.
49) கி. ஜெயந்தினி, மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.

**கல்விப் பகுதி**
**வினா இல-10**

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................
சொந்த முகவரி: ..............................
கற்கும் பாடசாலை: ..............................
மாணவர் கையொப்பம்: ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## புலமைப் பரிசில் வினா இல - 09 விடைகள்

01) தேங்காய்
02) வெற்றிலை
03) செவ்விதழ்
04) ஐவைந்து
05) பன்னிரெண்டு
06) பூ
07) பூங்கா
08) பூங்காவனம்
09) வனம்
10) கானம்
11) பம்
12) கால்
13) சம்
14) மூக்கு
15) நீதி
16) சுப்பிரமணியபாரதியார்
17) சேவகன்
18) பொய்யுரைப்பவன், நேர்மையற்றவன்
19) பெண்கள்
20) சிறு பிரச்சினையையும் பெரிதுபடுத்தி ஊர் எல்லாம் கூறித்திரிதல்
21) தேங்காய்
22) சீனி
23) புரதம்
24) எலும்பு
25) இரத்தம்
26) லதா, ராதா
27) லதா, ராதா
28) சுதா, கீதா
29) லதா, கீதா, ராதா
30) பாட்டு

## காணி நன்கொடை

யா/நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு வேண்டிய வகுப்பறைக்கட்டடம் அமைப்பதற்கென அயலில் உள்ள காணிகளை நன்கொடையாகச் சில பொதுமக்கள் வழங்கியுள்ளனர். [உ-82]

## இன்று ஒரு தகவல்

# பட்டால் தானே தெரியும்

புறக்கோட்டை ஜமீன்தாரர் தன் தகப்பனாரின் உடல்நிலை சரியில்லையெனத் திருமயத்திலுள்ள வைத்தியர் வீரராகவனுக்கு ஒரு ஆள் வாயிலாகத் தகவல் சொல்லி அனுப்பி உடனே கிளம்பி வரவும் சொன்னார். ஜமீன்தாரரின் ஆளும் உடனே வண்டி ஏதாவது இருக்குமாவெனப் பார்த்தான். அன்று ஜமீன் தாரரின் வண்டிகள் வெவ்வேறுஊர்களுக்குஏதோ வேலையின் பொருட்டுப் போயிருந்தன. அதனால் அவனுக்குஒருவண்டியும் கிடைக்கவில்லை. வைத்தியரை விரைவில் அழைத்து வர வேண்டி இருந்ததால் அவன் வேகமாக நடந்தே சென்றான்.

ஜமீன்தாரர் வண்டிஅனுப்பவில்லை. அவசரமாக வரச் சொன்னதால் வைத்தியரும் மாட்டு வண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு கிளம்பினார். அந்த வண்டியும் சரியானதாக இருக்கவில்லை; எல்லாம் தளர்ந்து லொடலொடவென ஆட்டங்கண்டிருந்தது. பாதையும் சரியாக இருக்கவில்லை. இரவுவேளை நல்ல இருட்டு, வண்டி மேட்டிலும் பள்ளத்திலும் போய் ஒரு கல்லின் மீதுமோதியது. அதனால் அந்த வண்டியின் அச்சு முறிய அவர் அந்த இரவு வேளையில் சிரமப்பட்டு நடந்து புதுக் கோட்டையை அடைந்தார்.

அங்கு ஜமீன்தாரரின் தகப்பனாரின் உடல் நிலையைப் பரீட்சித்து விட்டு அது சாதாரண காய்ச்சல் எனஅவர் கண்டார், இதற்காக இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டு இவ்வளவு தூரம் வந்தேன் என அவர் தன் மனத்திற்குள் நொந்து கொண்டார். ஆனால் அவர் அதனைவெளிப்படுத்தவில்லை. சற்று யோசித்தவராய் ஜமீன் தாரரிடம் 'நிலைமை ரொம்பமோசம். உடனே உறவினர்களுக்குத் தகவல் கொடுத்து வரவழையுங்கள்' என்றார். மறு நிமிடமேநாலா பக்கமும் ஆட்கள் போய் தகவல் சொல்ல விடிவதற்குள், பல உறவினர்கள் சிரமப்பட்டு வந்து சேர்ந்தனர்.

அப்போது வைத்தியர் நோயாளிக்கு மருந்தைக் கொடுத்து விட்டுத் தம் ஊருக்குக் கிளம்பவே ஜமீன்தாரர் 'இந்த நிலையிலா நீங்கள் போவது' என்றார். வைத்தியரும் 'நான் நேற்று இரவு எவ்வளவு கஷ்டப்பட்டு இங்கு வந்தேன் என்பதை உங்கள் உறவினர்களும் தெரிந்து கொள்ள வேண்டாமா? இவருக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை. சாதாரணகாய்ச்சல் தான்' என்றார்சிரித்தவாறே.

நன்றி.

அம்புலிமாமா, 1983

# விமான கப்பல் பதிவுகள் மட்டுப்படுத்தியஅளவில்

## நெருக்கடியை தவிர்க்கும் நடைமுறை

[யாழ்ப்பாணம்]

இருவழிப் பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொழும்பில் இருந்து வருபவர்களின் தொகை அதிகரித்திருப்பதால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையினைத் தவிர்க்கும் வகையில் மட்டுப்படுத்தப்பட்டளவில் விமான மற்றும் கப்பல் பதிவுகள் இடம்பெறவுள்ளதாக 'ரான்' அலுவலகம் அறிவித்துள்ளது.

இதன்,பிரகாரம், சித்திரை மாதத்தில் இருந்து, விமானப பதிவுகள் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் மு.ப 11.00 மணிதொடக்கம் பி.ப 2.00 மணி வரை இடம் பெறவுள்ளன.

நோயாளர், மரண வீடுகளுக்குச் செல்வோர், அவசர வேலை நிமித்தம் வெளி மாவட்டங்களுக்குச் செல்வோர்க்கு தகுந்த ஆதாரங்களைக் காட்டும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

விமானப் பயண பதிவுகள் மேற்கொள்ளும் புதிய நடைமுறை வருமாறு,

சித்திரை மாதம் 2, 3, 4 ஆம் திகதி பதிவுகள் இம் மாதம் 29 ஆம் திகதி மேற்கொள்ளப்படும்.

5, 6, 7 ஆம் திகதிப் பதிவுகள் சித்திரை 3ஆம் திகதியும்

9, 10, 11 ஆம்திகதிப்பதிவுகள் 5 ஆம் திகதியும்

12,13,14ஆம் திகதிப்பதிவுகள் 10 ஆம் திகதியும்

16, 17, 18ஆம் திகதிப்பதிவுகள் 12, ஆம் திகதியும்

19, 20, 21 ஆம் திகதிப் பதிவுகள் 17 ஆம் திகதியும்

23, 24, 25 ஆம் திகதி பதிவுகள் 19 ஆம் திகதியும்

26,27,28ஆம் திகதிப் பதிவுகள் 24 ஆம் திகதியும் மேற்கொள்ளப்படும்.

கப்பல் பயண பதிவுகளை மேற்கொள்ளும் புதிய நடைமுறை வருமாறு,

சித்திரை மாதம் 10,12 ந் திகதிப் பதிவுகள் இம் மாதம் 30 ந் திகதியும், சித்திரை மாதம் 17,19 ந் திகதி பதிவுகள் சித்திரை 6 ம் திகதியும்,

24, 26 ந் திகதி பதிவுகள் 13 ந் திகதியும் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10)

# திறமையான மாணவர்க்கு புலமைப் பரிசில் திட்டம்

(கல்வயல்)

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கனடா, அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், கொழும்பு ஆகிய கிளைகள் இணைந்து 1999 ஆம் 2000 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற க. பொ. த. (சா/த) பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் 20 மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 5 ஆயிரம் ரூபா வீதமும், 2000 ஆண்டு க. பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்தோர்க்கு 10 ஆயிரம் ரூபாவும் நன்கொடையாக வழங்கவுள்ளன.

இப் புலமைப்பரிசில் வருட வருமானம் 90 ஆயிரம் ரூபாவிற்கு குறைந்தவர்களுக்கே வழங்கப்படும் என்றும், இதற்கான விண்ணப்பங்களை ஏப்பிரல் 30 ஆம் திகதிவரை கொழும்பு பழையமாணவர் சங்க கிளைக்கு அனுப்ப வேண்டும் என்றும் சங்க செயலாளர் எம். அருளானந்தம் அறிவித்துள்ளார்.(உ-111)

# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மூவாயிரம் ஆசிரியர் நியமனம்

## மாகாண ஆளுநர் அனுமதி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் மூவாயிரம் ஆசிரியர்களை புதிதாக நியமிக்க மாகாண ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார்.

இத்தகவலை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் வெளியிட்டுள்ளார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் பணிபுரியும் சுமார் 11 ஆயிரத்து 271 ஆசிரியர்களை பதவி உயர்த்துவது தொடர்பான பணிகள் யாவும் தற்போது பூர்த்தியடைந்துள்ளதாகவும் மாகாணக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(உ-4)

## வருடாந்த மஹோற்சவம்

[யாழ்ப்பாணம்]

மூளாய்வதிரன்புலோ அருள்மிகு ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை இரதோற்சவமும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும்நடைபெறவுள்ளன.

(செ)

## இராமாயண சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

மூளாய் வதிரன் புலோ அருள்மிகு ஸ்ரீமுத்துக்குமார சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ தினங்களில் தினமும்மாலை5.00மணிக்குகான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா 'கம்பராமாயணம்' பற்றி தொடர் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(செ)

## பயிற்சிநெறி ஆரம்பம்

(ஏழாலை)

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சு நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் பாடசாலை அலுவலகத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களைப்பூரணப்படுத்தி வரும் 2ஆம் திகதிக்கு முன் பாடசாலைஅலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-12)

## மொழிப் பிரச்சினை தீராதா?

[வடமராட்சி கிழக்கு]

யாழ்ப்பாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் மொழிப் பிரச்சினை காரணமாக மக்கள் தமது முறைப்பாடுகளை முறையிட முடியாத நிலை தோன்றியுள்ளதாக இப்பகுதி மக்கள் தமது கையொப்பங்களுடன் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

[உ-43]

## வீதி திருத்தப்படும்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குமருதங்கேணி பருத்தித்துறைவீதியை விரைவில் திருத்தப்பட நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் வீதி கடந்த 10வருடங்களிற்கு மேலாக திருத்தப்படாமல் இருப்பதால் இப்பகுதி மக்கள போக்குவரத்தின் போது பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-43)

# யுத்த நிறுத்தத்தை அரசு பயன்படுத்த வேண்டும்

## இந்துப்பேரவை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

புலிகளது யுத்தநிறுத்தஅறிவிப்பை இந்தநாட்டின்நலன் கருதிசகல மதத்தலைவர்களும் அரசியல்கட்சிகளும் குறிப்பாக அரசாங்கமும் நல்லமுறையில் பயன்படுத்த வேண்டுமென யாழ்ப்பாண இந்துசமயப்பேரவை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

புலிகள் வழங்கியுள்ள இவ்வரிய சந்தர்ப்பத்தை அரசுநல்லமுறையில் பயன்படுத்தி அழிவுப்பாதையில் செல்லும் இந்தநாட்டை கட்டிஎழுப்ப முன்வரவேண்டும் எனவும் இதற்கான ஆலோசனையை சகலமதத் தலைவர்களும் அரசுக்கு அளிக்கவேணடும்.

போர்மூலம் ஒருபோதும் இந்தநாடடில் சமாதானம் ஏற்படமாட்டாது. கடந்த காலஅனுபவங்கள் இதற்கு நல்லபாடமாக அமைந்துள்ளது.

(ந-9)

# புங்குடுதீவு-இறுப்பிட்டிக்கு இன்று முதல் பஸ்சேவை

(யாழ்ப்பாணம்)

புங்குடு தீவு – இறுப்பிட்டிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்ததை அடுத்து அவர்களின் போக்குவரத்து நன்மை கருதி யாழ் பஸ்நிலையத்தில் இருந்து நேற்று முதல் காலை 7.45 மணிக்கு இறுப்பிட்டி வரையான பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபைபொது முகாமையாளர் வி எஸ் சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காலை 7.30க்கும, 8மணிக்கும் குறிக்கட்டுவான் வரை செல்லும் பஸ் வண்டியில் ஏற்படும் இடநெருக்கடியைக் குறைப்பதற்கு வசதியாக இறுப்பிட்டி வரை செல்லும் பஸ்வண்டியில் பெருங்காடு வரை செல்லும் அரச உத்தியோகத்தரும் ஆசிரியர்களும் பிரயாணம் செய்யலாம் எனறும் தெரிவிக்கப்பட்டுளளது.

இதுஇவ்வாறு இருக்க குறிக்கட்டுவானில் இருந்துபிற்பகல் 2 30 மணிக்கு புறப்படும் பஸ் நேற்று முதல் 3 30 மணிக்கும் நயினாதீவு பயணிகள் நன்மை கருதி பிற்பகல் 4 மணிக்கு புறப்படும் பஸ் 4 30 மணிககுப் புறப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

# வலிகாமம் வடக்கு பிரதேச மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேசமலர் வெயீட்டுவிழா இன்று மு. ப. 10.00 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மலர் அறிமுகவுரையைச் சைவப்புலவர் சு. செல்லத்துரை, வாழ்த்துரையையாழ் மாவட்ட அரசஅதிபர் க. சண்முகநாதன், ஆசியுரைகளை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்கவி சீ. விநாசித்தம்பி, வெளியீட்டுரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

(உ)

# கொக்குவில் இந்து மயானத்தை புனரமைக்கக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துமயானத்தைப் புனரமைப்புச் செய்து தடங்கல்களின்றி ஈமக்கிரியைகளைச் செய்ய உதவுமாறு நல்லூர்ப் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கோரிக்கையினை விடுத்த பதில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,

திருநெல்வேலி இந்துமயானத்தைப் போன்று மயான அபிவிருத்திச் சபை ஒன்றைத் தெரிவு செய்து அதன் கீழ் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

(உ-2-10)

# கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க தெரிவுப் பரீட்சை

(சுண்டுக்குளி)

யாழ் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள சங்கத்தில் புதிய மத்தியஸ்தர்களை இணைக்கும் நோக்குடன் வருடாந்தம் நடாத்தப்படும் தெரிவுப் பரீட்சை எதிர்வரும் ஏப்பிரல் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இத் தெரிவுப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் கிரிக்கெட் ஆர்வலர்கள் விண்ணப்பப் படிவங்களை இல 347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத்திகதி ஏப்பிரல் 11 ஆம் திகதி என சங்கச் செயலாளர் எஸ் சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.

(உ-110)

### கொங்கொங்கில்

# தோல் பொருள் கண்காட்சி 29 நாடுகள் பங்கேற்றன

(கொங்கொங்)

ஆசிய பசுபிக்தோல் பொருள் கண்காட்சி கொங்கொங்கில் ஆரம்பமாகியுள்ளது.

இக் கண்காட்சியில் இந்தியா முக்கிய இடம் வகிப்பதுடன் இந்தியாவின் பிரதிநிதியே முதல் நாள் கண்காட்சியைத் தொடக்கிவைத்துள்ளார்.

இந்தியா உட்பட இருபத்தொன்பது நாடுகளின் தொளாயிரத்து முப்பத்தேழு நிறுவனங்கள் இதில் பங்கு கொள்கின்றன.

ஆசியாவில் வசந்த விழா என்று இக் கண்காட்சியை வர்ணிக்கிறார்கள். (து)

# பஸ் பள்ளத்துள்பாய்ந்தது 14பேர்பலி; 25பேர் காயம்

(போர்த்துக்கல்)

போர்த்துக்கலில் பயணிகள் பேருந்து ஒன்று 100 அடி பள்ளத்தில் விழுந்ததில் அதில் பயணம் செய்த பயணிகளில் 14 பேர் பலியாகியதுடன் 25 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 6 பேரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. இப் பேருந்தில் பெரும்பாலும் வயோதிபர்களே பயணம் செய்ததாகவும் தெரிய வந்துள்ளது. (உ-2)

# அரண்மனை பராமரிப்பு மகாராணி பொறுப்பில்

(இலண்டன்)

இந்த ஆண்டுமுதல் தமது ஐந்து அரண்மனைகளுக்குமான பராமரிப்பு செலவை 2 ஆம் எலிசபெத் மகராணியாரே செலுத்துவதாகத் தீர்மானித்துள்ளார்.

மேற்படி அரண்மனைகளின் பராமரிப்புச் செலவு 1697 ஆம் ஆண்டுமுதல் அரசினாலேயே வழங்கப் பட்டு வந்தது

வரியிறுப்பாளர்களின் சுமையைக் குறைக்கும் நோக்குடனேயே அச் செலவை தாம் செலுத்த விரும்பியதாக மகாராணி தெரிவித்துள்ளதாக, அவரது நிதி ஆலோசகர் சேர் மைக்கேல் பீட் தெரிவித்துள்ளார்.

ஆண்டு ஒன்றுக்கு அவ் அரண்மனைகளின் பராமரிப்புச் செலவு 21, 42 மில்லியன் டொலர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

### படையினர் மீது

# சரமாரியான கல் வீச்சு ஜம்முவில் சம்பவம்

[புதுடில்லி]

ஜம்மு காஷ்மீர் பகுதி பாரமுல்லாவில் படையினர் மீது இனம் தெரியாத கும்பலொன்று சரமாரியாக கற்களை வீசித் தாக்கியது.

பாரமுல்லாப் பகுதியில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு சில மணி நேரத்தில் வீதியால் வாகனத்தில் சென்று கொண்டிருந்த படையினர் மீது மறைந்திருந்த கும்பலொன்று சரமாரியாகக் கற்களை வீசித் தாக்கியது இதனால பல படையினர் காயத்துக்குள்ளானார்கள்,

பதட்ட நிலை தொடர்ந்ததையடுத்து ஜம்முவில் பாரமுல்லா போன்ற சில பகுதிகளுக்கு மீண்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (து)

# ஆர்ப்பாட்டக்காரர் விடுதலை செய்யப்பட்டார்

(லாஹூர்)

இராணுவ ஆட்சியாளருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட ஆயத்தம்மேற்கொண்டவேளை கைதாகிய ஆர்ப்பாட்டக்காரர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது

கைது செய்யப்பட்டோரில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியவர்கள் 22 பேர் மீது வழக்குத் தொடரப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ ஆட்சியை முடிவிற்கு கொண்டுவருவதற்காகவே 16 கட்சியினர் இணைந்துஇவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட இருந்தனர் என்றும் இரண்டாயிரம் பேர் கைது செய்யப்பட்டதாகவும் கூட்டணிக் கட்சியினர் தெரிவித்துள்ளனர். (உ-3)

# அணுஆயுத ஏவுகணைத்திட்டத்தை பாகிஸ்தான் கைவிடப்போவதில்லை

### ஜெனரல் முஷாரப் அறிவிப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் ஒருபோதும் அணுவாயுத ஏவுகணைத் திட்டத்தைக் கைவிடப்போவதில்லையென்று இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மூவாயிரத்து எண்ணூறு கோடி கடன் பிற நாடுகளுக்குக் கொடுக்க வேண்டியிருந்தாலும் ஏவுகணைத் திட்டத்தைக் கைவிடப் போவதில்லையென்றும் நாட்டின் பாதுகாப்புக்காக ஒதுக்கப்படும் நிதியைக் குறைக்கப் போவதில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தான் ஆயுதக் குவிப்புப் போட்டியில் இறங்காதென்றும் பாதுகாப்புக்கு முக்கிய இடம்கொடுக்கப்படுமென்றும் இராணுவ ஆட்சியாளர் தெரிவித்தார்.

இதேவேளை, காஷ்மீர் பிரச்சினை தீரும் வரை இந்தியாவுடன் பொருளாதார வணிக உறவுகள் கிடையாதென்றும்அவர் தெரிவித்தார். (து)

### உலக தரிசனம்

# குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விளக்கமளிக்க 3 நாள்அவகாசம்

### த. மா. கா ஒழுக்காற்றுக்குழு விதிப்பு

(புதுடில்லி)

த. மா. கா. வின் கொள்கைகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச் சாட்டின் பேரில் த.மா.கா வில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள தா. மா. காவின் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ப. சிதம்பரத்திற்கு தமது நிலையை தெளிவுபடுத்த த. மா. காவின் ஒழுக்காற்றுக் குழு 3 நாள் காலக் கெடு விதித்துள்ளது.

எதிர்வரும் சட்ட மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு த.மா.க, அ.இ.அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்ததை அது மீள்பரிசீலனை செய்யவேண்டும் என ப.சிதம்பரம் அறிக்கை ஒன்றை விட்டிருந்தார்.

இவ் அறிக்கை தொடர்பாக அவருக்கும் கட்சித் தலைவர்கள் மற்றும் தொண்டர்களால் பல பிரச்சினைகள் எழுந்திருந்தன.

இதைத் தொடர்ந்து அவரைக் கட்சியிலிருந்து விலக்க வேண்டும் என்ற தீர்மானத்தை த.மா.காவின்செயற்குழு எடுத்த தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றி அதை தமது ஒழுக்காற்றுக் குழுவிற்குமூப்பனார் அனுப்பியிருந்தார்.

அதை விவாதித்த ஒழுக்காற்றுக்குழு ப. சிதம்பரம் உட்பட ரங்கநாதன், சுந்தரம், சிவகங்கை மாவட்டத் தலைவர் காசிலிங்கம் மற்றும் சில எம்.எல். ஏக்கள் ஆகியோரைகட்சியிலிருந்து இடைநிறுத்தி தமது நடவடிக்கைகளுக்கு விளக்கமளிக்க 3 நாள அவகாசத்தையும் கொடுத்துள்ளது.

விளக்கமளிக்கத் தவறின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-2)

### செய்திப்பரல்

★ ஜப்பானின் மேற்கு ஹிரோஷிமாவைசனிக்கிழமையன்று 6,4 ரிட்சர்ட் அளவிலான பூமியதிர்ச்சி தாக்கியுள்ளது.

★ நீர்மூழ்கிக் கப்பலில் பெண்கள பணிபுரிவதற்கு முதன் முதலாக கனேடிய அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

★ 2001 ஆம ஆண்டுக்கான தாய்லாந்து உலகஅழகுராணியாகவரின்படுங்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

★ பூனையை உதைத்து கொலை செய்த நபர் ஒருவருக்கு சிங்கப்பூர் அரசு இரண்டு வார சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

★ அமெரிக்க புளோரிடா மாநிலத்தில் அறுவைச் சிகிச்சைக்காக டாக்டர் ஏற்றிய ஊசியால்பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார். (உ-3)

### தேர்தலில் வாக்களிக்க

# அ. அ. முறை அமுல் எதிர்த்து மனுத் தாக்கல்

(இந்தியா)

இந்தியாவில் நடைபெறவுள்ள சட்ட மன்றத் தேர்தலில் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையைக் காட்டியே வாக்களிக்க வேண்டும் என்ற கமிஷனின் உத்தரவை தடைசெய்ய வேண்டும் எனக் கோரி சென்னை உயர் நீதி மன்றில் பொதுநல வழக்கு ஒன்று தொடரப்பட்டுள்ளது

இது குறித்து சென்னை சிந்தனையாளர் அமைப்பின் தலைவர் கஜபதி மேற்படி நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அவரது மனுவில் வாக்காளர் ஆள் மாறாட்டத்தைத் தடுக்க, தேர்தல் கமிஷனால் சிலருக்கே அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 65 வீதமானவர்களுக்கு வாக்காளர் அடையாள அடடைகள் வழங்கப்படவில்லை.

அத்துடன் போலி அடையாள அட்டைகளும் நிறைய நடமாடுகின்றன. மேலும்ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள வாக்காளர் பலரும் அடையாள அட்டை இல்லாதுள்ளனர். தேர்தல் கமிஷனின் உத்தரவுப்படி இவர்களும் வாக்களிக்க முடியாத நிலை உள்ளது; இது ஓர் அடிப்படை மனித உரிமை மீறலாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ-2]

# இஸ்ரேலிய துருப்புக்கள்மீது நச்சு வாயு தாக்குதல்

[ஜெருசலேம்]

மத்திய கிழக்கு காஸாப் பகுதியில் இஸ்ரேலிய துருப்புகள நச்சு ஆயுதத்தால் தாக்கியதில் பலஸ்தீனபொலிஸார் பலர் மயக்க மடைந்தனர்.

கடமைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த பொலிஸ்குழுவினருக்கு அருகில் ஊதா நிறத்தூள் கொண்ட குண்டு வீசப்பட்டதால் மயக்கமடைந்த பொலிஸார் மருத்துவம்னையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்;

சிதறிய ஊதா நிறப்பொருள் இரசாயனப் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. [து]

# திருநாமுல் காங்கிரஸுடன் கூட்டு காத்திருக்கிறது பாரதியஜனதா

(குல்குத்தா)

மேற்கு வங்க சட்ட சபைத் தேர்தலை யொட்டி திருநாமுல் காங்கிரசுடன் கூட்டுச் சேர்வதற்கு காத்திருப்பதாக பாரதிய ஜனாதாக் கட்சியின் பேச்சாளா ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்க இடதுசாரி ஆட்சியை கவிழ்ப்பதற்கு பாரதிய ஜனதாவை பலமுறை தூண்டிவந்த திருநாமுல் காங்கிரஸ் இப் பொழுது சோனியாகாந்தியுடன் பேச்சுக்கள் நடத்துவதாகவும் காங்கிரஸ் கடசியுடன் இணைந்து போட்டியிடப் போவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பாரதிய ஜனதாக் கட்சிக்கும் திருநாமுலுக்கும் தொடர்புகள் அற்றுப்போகவில்லையென்றும் சில விடயங்களில் முரண்பாடுகளைத் தீர்த்து உடன்பாட்டுக்கு வரலாமென்று பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, காங்கிரசுடன் உடன்பாடு இல்லாத பட்சத்தில் தனித்து மேற்கு வங்கத் தேர்தலில் போட்டியிடப்போவதாக மம்தா பனார்ஜி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

### அமெரிக்க கடற்பரப்பில்

# 234 கள்ளக் குடியேற்ற வாசிகள் கைது, 9 பேர் இலங்கையராம்

(வாஷிங்டன்)

கௌதமாலாவில் இருந்து, படகு ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட 9 இலங்கையர் உட்பட 234 கள்ளக் குடியேற்றக்காரரை அமெரிக்கப் படையினர் கைது செய்துள்ளனர்.

கொஸ்ரோவுக்கு அருகாக, ரோந்தில் ஈடுபட்டிருந்த அமெரிக்க கடற்படையினர் மேற்படி ஆட்கள் சென்ற படகினை மடக்கிப் பிடித்து அமெரிக்க பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை,

இலங்கையர் 9 பேரும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாய் அறிவிக்கப்பட்டுள்ளது; (உ-து)

‘குணனும் குடிமையும் குற்றமும் குன்றா இனனும் அறிந்தியாக்க நட்பு’
குறள்

# வலம்புரி

## கோபம் தணிக்கும் பயணம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த 5 மாதத்திற்குள்மூன்றாவது தடவையாக வெளிநாட்டிற்குப் புறப்பட்டுள்ளார். உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்திற்குச் சென்றிருந்த ஜனாதிபதி பிரிட்டனுக்குச்சென்று விடுதலைப் புலிகளை எப்படியும் தடை செய்துவிடவேண்டுமென தீவிரப்பிரச்சாரம் செய்தார்.

அதனைத் தொடர்ந்து அவரது வெளிநாட்டுப் பயணம் தீவிரமடைந்துள்ளது. வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்வது-நிதி சேகரிப்பதைக் கட்டுப்படுத்துவது என அவரின் வெளிநாட்டுப் பயணத்தின் ஆரம்பகட்ட இலக்குஇருந்த போதிலும் தற்போது அந்நிலை மாறிவிட்டது.

புலிகளைத் தடை செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த ஜனாதிபதிக்கு வெளிநாடுகள் புலிகளைத் தடை செய்யும் வேகத்தில் தமக்கும் அழுத்தம் தரப்போகின்றன என்ற உண்மை தெரியாமல் போய்விட்டது.

விடுதலைப் புலிகளைத் தடைசெய்த பிரிட்டன் இலங்கை அரசிற்கும் சதா அழுத்தம் கொடுத்தபடியேயிருக்கிறது தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும், அவர்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படவேண்டுமென்பதில் பிரிட்டன் மட்டுமன்றி இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் இறுக்கமாகவே உள்ளன. புலிகளைத் தடைசெய்ய வேண்டுமென்ற ஆவலிலும், வெளிநாட்டு உதவியின் தேவையிலும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

இப்போது சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதில் ஜனாதிபதிக்கு பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. காலாகாலமாக சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்சினைக்குச் சாட்டுப்போக்குக் கூறி காலத்தைக் கடத்தினரேயொழிய தீர்வு கண்டிலர். இதே போன்று பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலும் ஜனாதிபதிக்கு தமிழர் பிரச்சினையைத்தீர்க்கவேண்டுமென்ற விசுவாசமிருந்தாலும், பரிவார மூர்த்திகள் ஒரு போதும் இதற்கு உடபட மாட்டார்கள் என்பது வெளிப்படை.

இந் நிலையில் சர்வ தேசத்தின் கோபத்தைத் தணிக்க வெளிநாடு செல்வது தேவையாக உள்ளது.

# ஆதிக்க நோக்கம் கொண்டவரின் அதிகாரம்

# அன்புள்ளமுடையார்சேவையின்முன்செல்லுமா?

திருமதி
சரோஜினி கல்யாணசுந்தரேசன்

உலகின் பல பாகங்களிலும் அடக்கு முறைக்கும் அதிகாரப் பிரயோகத்திற்கு மெதிராக மக்கள் குரல்கள் ஓங்கி ஒலிப்பதை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. அடக்கி ஆளவும் அதிகாரம் செலுத்தவும் நியமிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வெகு சொற்பம். ஆனால் அதிகாரத்திற்கும் ஆதிக்கத்திற்கும் அடங்கிப் போக வேண்டியவர்களின் தொகையோ மிக மிக அதிகம். எங்கே மக்களின் எண்ணிக்கை கூடிக் காணப்படுகின்றதோ, அங்கேயே பலமும் கூடிக் காணப்படுகின்றது. பொய்யாக இருந்தாலும் பலர் சேர்ந்து சொல்லும் போது உண்மைபோலத் தோன்றுகின்றது. நீதிமன்றங்களிற் கூட பலர் சாட்சியெனக் கூறும்போது பொய் மெய்யாகி உண்மை தோற்றுவிடுகின்றது. பலர் சாட்சிக்கு வரும் போது அங்கே வெற்றி தோன்றுகின்றது. ஆகவே அதிகாரம் செய்வதும் அடக்கி ஆள்வதும் ஒரு மாபெருங் குற்றமாகச் சித்தரித்துக் காட்டப்படுகின்றது. ஒரு ஜனநாயக சமுதாயத்தில் தொழிலாளிகள் கௌரவத்துடன் நடாத்தப்பட வேண்டும். அன்பின் மூலமே கருமங்கள் ஆற்றப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எல்லா மக்களும் ஆதரிக்கின்றனர். ஆனால் எங்கே உண்மை, நியாயம் இருக்கின்றது என்று சிந்திப்பது மக்களிடையே அருகி வருகின்றது. உண்மையைக் கூறினால் பகைமையைச் சம்பாதிக்கவேண்டுமே என்று ஒதுங்கிப் போபவர்களே அதிகம் எனலாம்.

### அன்பின் இன்றைய நிலை

அடக்கி, ஒடுக்கும் முறைகளினாலும், அதிகாரத்திலும் சாதிக்க முடியாத அரிய பெரிய காரியங்களையும் அன்பினால் சாதித்து விடலாம் என்று ஆண்டாண்டு காலமாகச் சாத்வீகத்தைப் பின்பற்றி வெற்றி கொண்ட அறிஞர்கள் கூறி வந்ததை நாம் அறிந்திருக்கிறோம். அன்பு தன்பாட்டில் தன் தூய்மையை இழந்து விடவில்லை என்பது ஏதோ உண்மை தான். அன்பே சிவம் அன்புதான் தெய்வம் என்பதனை ஒருவரும் மறுக்க முடியாது. ஆனால் அன்பு இப்பொழுது தனது தலையை ஒரு இடத்திலும் நுழைக்க முடியாமல் தடுமாறுகின்றதே! அதனை என்னவென்று சொல்வது? ஐந்தறிவுப் பிராணியையும், கள்ளங்கபடமறியாத பருவக்குழந்தையையும் தான் அன்புக்கு அடிபணிய வைக்கலாம். அவைகளுக்கு அங்கே அன்பின் நோக்கம் புலப்படுவதில்லை. பல சந்தர்ப்பங்களிலும் அன்பானது சுயநலத்தினால் மாசுபடுத்தப்பட்டுள்ள காரணத்தால், சிந்தித்துத் தொழிற்படும் ஒரு மனிதன் அன்பின் நிமித்தம் என்று ஒருவர் கூறும் புத்திமதிகளை ஒருபோதும் ஏற்றுக் கொளவதில்லை. புத்திமதிகளின் நோக்கம் என்னவென்பதை இலகுவில் அடையாளம் கண்டு கொள்கின்றான்.

கல்விக் கூடங்களில்அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தலே தமது தலையாய கடமை என்று தூய நோக்கத்துடன் தொழிற்படுகின்றனர். புத்திமதிகள் என்று கூற முற்பட்டால் அவைகள் அன்பின் பெயரால் வழங்கப்படுகின்றன. அங்கே நோக்கங்கள் பல தரப்பட்டவை. நிர்வாகத்தை இலகுவாக்கவோ, அன்றிப் பாடசாலைக்குப் புகழ் சேர்க்கவோ, அன்றேல் தனிப்பட்ட புகழ் சம்பாதிக்கவோ என்று இன்னோரன்ன நோக்கங்கள் பொதிந்து காணப்படலாம். கற்பிக்கவேண்டிய பாடத்தை ஆயத்தம் செய்யாத விடத்தும் அன்றிக் கற்பிக்க ஏற்ற மனநிலை இல்லாத விடத்தும் ஆசிரியர்கள் அன்பான போதனைகளுக்குத் திசை திரும்பலாம். இங்கே உள்ள நோக்கங்களை மாணவர்கள் இலகுவில் கிரகித்துக் கொள்வார்கள். ஆகவே அன்பின் நிமித்தம் என்று கூறும் புத்திமதிகளுக்கு மாணவர்கள் ஒருபோதும் மதிப்புக் கொடுப்பதுமில்லை, செவி சாய்ப்பதுமில்லை. கடுமையான நிபந்தனைகளும், எச்சரிக்கைகளும் கல்விக் கூடங்களின் நோக்கங்களை நிறைவு செய்வதில் ஓரளவு வெற்றியைக் கொடுத்தாலும், அன்பு ஒரு போதும் எதிர்பார்க்கும் பலனைக் கொடுப்பதில்லை என்பது தான் கசப்பான உண்மை.

### ஊதியம் பெறவே தொழில்

அதிகாரமும் அடக்கு முறையும் தான் அங்குள்ள சுவாத்தியமென இயங்கும் பெரிய வர்த்தக ஸ்தாபனங்களை நோக்குமிடத்து அங்கு அன்பு மொழி பிரயோகிக்கப்படுமேயானால் பல இலட்சம் ரூபா செலவில் பெரும் ஆதாயத்தினை எதிர்பார்த்து நிறுவப்பட்ட ஸ்தாபனங்கள் நோக்கங்களைப் படுகுழியில் தள்ளி, ஈடுசெய்ய முடியாத பெரு நஷ்டத்துடன் இழுத்து மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் நோக்கங்களை எய்துவதற்கென நியமிக்கப்பட்ட உயரிய தகைமைகளைக் கொண்ட நிர்வாகிகள் அநேகமாக ஸ்தாபனங்களுக்கு மிகவும் நம்பிக்கையானவர்களும் வேண்டியவர்களும் கூட அங்கே தொழில் புரியும் பல தரப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்காகத் தாங்கள் கடமை செய்ய வேண்டும் என்ற ஒரே குறிக்கோள் இருக்க வேண்டும். என்ற நியதியில்லை. கொடுக்கப்பட்ட பணியைச் செய்து முடித்தாற் சரி என்ற நிலைப்பாடே காணப்படுகின்றது. மேலும் இக்கால கட்டத்தில் உத்தியோகத்தர்கள் யாவரும் ஊதியத்தின்பொருட்டே தொழில் தேடிக் கொள்கின்றனர். அவர்கள் தமது சொந்தப் பிரச்சினைகளையும், தேவைகளையுமே மனத்தின் முன்னணியில் நிறுத்திக் கொள்கின்றனர். சந்தர்ப்பங் கிடைக்கும் போதெல்லாம் கடமையை உதாசீனம் செய்து தமது தேவைகளின் பொருட்டுச் சென்று விடுகின்றனர். ஓர் தொழில் அதிபர் இங்கு அன்புடன் நடந்து கொள்ள வேண்டுமென்ற நியதி இருக்குமேயானால் தொழிலாளர்களுடைய சொந்தப் பிரச்சினைக்காக ஸ்தாபனத்தின் உயரிய நோக்கங்களை உதாசீனம் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட வேண்டி நேரிடும். மேலும் நித்தம், சாவாருக்கு நித்தம் அழுவாரில்லை’ என்ற அரிய பழமொழியையும் இங்கு சிந்திக்க வேண்டும். அரச நிறுவனங்களிலும் இந்த நிலைப்பாடே காணப்படுகின்றது. அங்கேயும் வரவுக்குரிய கருமங்களும், செலவுக்குரிய கருமங்களும் மிகவும் நிதானத்துடன் நடத்தப்பட வேண்டிய தேவை இருக்கும் காரணத்தால் அன்புக்கும் சீவகாருண்யத்திற்குமென ஒதுக்கப்பட வேண்டிய நேரம் மிகவும் சுருங்கி விடுகின்றது.

### சுயநல நோக்கம்

தூய அன்பை விலை கொடுத்தும் வாங்க முடியாது போய் விட்டது. ஒரு தாயின் அன்பு தான் கலப்படமற்றது, பலன் எதிர்பாராததுஎன்றஒருமாபெரும் உண்மை கூட ஆட்டம் காண்கின்றது. ஒரு பிள்ளையைப் பலிக்கடாவாக்கி மற்றப் பிள்ளைகளை வாழ வைக்கும் குடும்பத் தலைவிகளும், வாழ்ந்த மகள் வந்தால் வண்ணப் பாய் விரிப்பதும் கெட்ட மகள் வந்தால் கிழிந்த பாய் விரிப்பதுமான மனப்பான்மை கொண்ட தாய்மாரும், வேலை பார்த்து தாயின் கை நிறைய ஊதியம் கொடுத்து குடும்பத்தின் நன்மை கருதி அடங்கி நடக்கும் பெண்பிள்ளைகளின் திருமணத்தை வேண்டுமென்றே ஒத்திப்போடும் தாய்மாரும், வெளிநாட்டில் உழைக்கும் மகனின் ஊதியத்தை உறிஞ்சும் தாய்மாரும் சமுதாயத்தில் மலிந்து விட்டனர். ஆகவே ஒரு தாயின் அன்பு கூட சுயநல நோக்குடன் பளிச்சிடுகின்றது. இந்த அன்பு நாளடைவில் விரோதத்தினைத் தோற்றுவிக்கும் என்பதனைமறுக்க முடியாது.

எளிமையே தோற்றமெனக் கொண்டு, சேவைக்கெனத் தம்மை அர்ப்பணித்த மனிதர்களில் மாணிக்கமெனக் கொள்ளும் தன்மை வாய்ந்த மகாத்மாகாந்தி, அன்னை திரேசா, புளோரன்ஸ் நைற்றிங்கேல் போன்றவர்கள் நம் மத்தியிலும் இருக்கவே செய்கிறார்கள்

## தவக்காலச் சிந்தனை-29



பொன், புகழ், பதவி, பட்டம், பெருமை- இவற்றிற்காக அலையும் மனிதர்களே இவ்வுலகில் ஏராளம். ‘‘பணமா, எதையும் செய்யத் தயார்’’ என்கிறது சமூகத்தின் நடைமுறை. நாட்டின் பிரதமரும், முதலமைச்சரும் கூட பணத்திற்காக பதவியையும்,பதவிக்காக பணத்தையும் விரும்பி ஏற்கும் சூழ்நிலை காண்கிறோம்: தன் பெருமை பாராட்டவோ, தன் அரசை நிலைநாட்டவோ இயேசு இவ்வுலகிற்கு வரவில்லை; தன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றவே வந்தார். ‘‘நானாகவே எதையும் செய்வதில்லை என் தந்தை அருளியதையே நான் செய்கிறேன்’’ என்பதே அவர் தரும் செய்தி. புகழ், பெருமை, பதவி, பணம் இவை நம்மை இயக்கும் சக்தியாகாமல், இறை தந்தையார் திருவுளமும், அவர் தம் அன்பும் நம்மை இயக்குமானால் நம் வாழ்வு வெற்றியடையும்.

காவலன்

## இயேசு எங்கள் இரட்சகர்

மாட்டை குடிலில் மனிதனாய்ப் பிறந்தவர்
மனிதனை பண்ணால் மாண்புறப் படைதவர்
மனிதனின் கையால் பாடுகள் பட்டவர்
அவரே எங்கள இயேசு இரட்சகர்

யூதர்கள் கையில் சிறையும் பட்டனர்
காத்தில் கயிறு கட்டியும் இழுத்தனர்
செம்மறி போலவே பலிக்காய் ஏகினர்
அவரே எங்கள் இயேசு இரட்சகர்

குருக்கள் சபையிலே அமைதியாய் நின்றவர்
பொய்யான குற்றத்தைப் பொறுமையாய் ஏற்றவர்
தேவ பழிகாரனாய் நிந்தனை ஏற்றவர்
அவரே எங்கள் இயேசு இரட்சகர்

கன்னத்தில் நிறைவாய் அறைகளை ஏற்றவர்
சிரசில் முள்முடி தாங்கி மகிழ்ந்தவர்
பரிகாச இராசனாய் நிந்திக்கப்பட்டவர்
அவரே எங்கள் இயேசு இரட்சகர்

பாரச் சிலுவையைத் தோள்களில் ஏற்றவர்
கபாலமலை மட்டும் தொய்வோடே நடந்தவர்
பாரத்தால் தரையை முத்தமும் செய்தவர்
அவரே எங்கள் இயேசு இரட்சகர்

சிலுவையின் மேலே சிலுவையாய்ப்படுத்தவர்
கைகளில் கால்களில் ஆணிகள் ஏற்றவர்
கள்வரொடு கள்ளனாய்க் கணக்கிடப் பட்டவர்
அவரே எங்கள் இயேசு இரட்சகர்

முகத்தின் ஒளியும் மங்கிப் போனதோ
விழிகளும் பாவியைப் பார்க்க மறந்ததோ
திருத்தலையும் பூமியை நோக்கிச் சரிந்ததோ
மரணமும் இறைவனை அணைத்து நின்றதோ.

அடக்கிய இயேசுவைத்திறந்து பார்த்தனர்
திறந்து பார்த்தவர் இயேசுவைக் கண்டிலர்
உயிர்த்த இயேசுவை ஏனிங்கு தேடினர்
உங்கட்கு முன்னவர் கலிலேயா ஏகினர்

சில்லையூர் செல்வநாதன்

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1622)

# யாழ்ப்பாணத்திலுள்ள பாவனைக்குதவாத 2500 மெ.தொன் அரிசியை

# கொழும்புக்கு அனுப்பப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படவென புனர்வாழ்வுப் பகுதியினரால் கொழும்பிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மனிதபாவனைக்குதவாத 2500 மெற்றிக்தொன் அரிசியை உடன் திருப்பி அனுப்புமாறு அத்தியாவசிய ஆணையாளர் நாயகம் ஆரிய அராச்சி யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனைக் கடி மூலம் கேட்டுள்ளார்.

மனித பாவனைக்குதவாத 2500 மெற்றிக்தொன் அரிசி யாழ்மாவட்டத்தில் இருப்பதாக கூட்டுறவு அமைச்சு அத்தியாவசிய சேவை ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்ததை அடுத்தே இந்த அரிசி மீளப்பெறப்படவுள்ளது. (வ)

## பல்கலை மாணவன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மூன்றாம் வருட மாணவன் முருகேசு கேதீஸ்வரன் பண்டத்தரிப்பு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இம்மாணவர் தொடர்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் பண்டத்தரிப்பு இராணுவ முகாமில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-6)

## நீதிமன்ற.-,

டனர்.

பிரதம பொறியியலாளர் டி. ஏ. ஹேமசிறி தலைமையிலான இக்குழுவுடன் மேல்நீதிமன்ற நீதியரசர் கே. பி. எஸ் வரதராசா யாழ். நீதிமன்ற நீதியரசர் இ. த விக்கினராசா சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோரும் சென்று இடங்களைப் பார்வையிட்டனர்.

இன்று காலை பருத்தித்துறை நீதிமன்றத்தையும் பார்வையிட்டபின் கொழும்பு திரும்பவுள்ளனர். (வ-6)

## வ.கி வைத்திய - - -

பான பட்டியல்ஒன்று வடக்கு கிழக்கு மாகாணசபை சுகாதாரஅமைச்சுக்கு அனுப்பிவைத்துள்ளது இப்பட்டியலின் பிரகாரம் தேவையான உபகரணங்கள் முன்உரிமை அடிப்படையில் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் படவுள்ளது. (வ)

## மாணவ - - -

வனின் தந்தை மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இம்மாணவன் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கடந்தவருடம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றியவர் என்பதும் குறிப்பிடத் தக்கது. (இ-6)

## விடுதலைப்- - -

தந்திரமென்றும், இத்தகைய தடைகள் மிகக்குறைந்தளவிலேயேவிதிக்கப்படவேண்டுமெனவும் கருத்துத் தெரிவித்துள்ளதுடன் அமெரிக்கா புலிகளைத் தடை செய்ததன் மூலம் தன்னைத்தானே அந்நியப்படுத்திக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (இ)

## பாடசாலை - - -

பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஈ.பி.டி.பி வட்டாரங்கள் படையினர் மற்றும் பொலிசாரின் கவனத்தின் கீழ்கொண்டுவந்திருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (உ)

## பதவி - - -

யின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

அவரது இக்கோரிக்கையைப் பரிசீலித்த அமைச்சரவை இதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக வடக்குக் கிழக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு, மற்றும் வடக்குக் கிழக்குத் தமிழ் விவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை வெற்றிடங்கள பற்றிய வர்த்தமானி அறிவித்தல் "சம்பந்தப்பட்ட அமைச்சுகளால் விரைவில் வெளியிடப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

## சமாதான - - -

அரனால்அறிவிக்க முடியாது புலிகள் தொடர்ந்தும்யுத்த நிறுத்தத்தை அறிவித்துவந்தாலும் பேச்சுக்கான திகதியை இன்னமும் அறிவிக்கவில்லை. அதனை உடனடியாக அவர்களால் அறிவிக்கவேண்டுமென்றும் அவர்கேட்டுள்ளார். (வ)

## திருச்செல்வம்

வாத புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்டார் கடும் சித்திரவதைக்குள்ளான இவர் தற்பொழுது வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்

அ. வினாயகமூர்த்தி எம்.பியும், மற்றும் சர்வதேச பத்திரிகையாளர் அமைப்புகளும் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து சட்டமா அதிபர் கமலசபேசன் திருச்செல்வத்தை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதனை அடுத்து திருச்செல்வம் எதிர்வரும் 30ம் திகதி விடுதலை செய்யப்படுவாரென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## பரீட்சை கொடுப்பனவு

(கொழும்பு)

கடந்தவருடம்நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையின் போது, கடமையாற்றிய அதிபர்மற்றும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வந்துசேர்ந்துள்ளது.

இக் கொடுப்பனவுகள் வழமையாக பரீட்சை முடிந்தவுடன் வழங்கப்படுவது வழக்கம். ஆனால் இம் முறை பரீட்சை முடிந்து பெறுபேறுகள் வெளியாகிய பின்பே வந்து சேர்ந்துள்ளது. [இ-02

## 11 கிலோ---

வெடிமருந்துப்பொருள் மறைத்துவைக்கப் பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து பஸ்வண்டியில் பிரயாணம் செய்த15 பேரும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஆறுபேர் தமிழர்கள் இவர்களில் 5 பெண்களும் ஒரு ஆணும் அடங்குவர் ஏனையோர் சிங்களவராவர். (வ)

## மட்டக்களப்பில் - - -

படையில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீது விமானத்தாக்குதல்நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் இத் துண்டுப்பிரசுரங்களில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இராணுவத்தினரால் விடுவிக்கப்படாமல் இருக்கும் பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கூடாக போக்குவரத்துக்களை வைத்துக்கொள்ள வேண்டாம் என்றும், விடுதலைப் உலிகளின் முகாம்களிலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரம் விலகி இருக்குமாறும் கேட்கப் பட்டுள்ளது.

இராணுவத்தினரின் இத்தகைய துண்டுப் பிரசுர மூலமான வேண்டுகோளை அடுத்து கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் பலத்த பதற்றம் நிலவுவதாகவும் எந்நேரமும் படையினரின் தாக்குதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படலாம் என்ற பீதியுடன் மக்கள்காலத்தைக் கழித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

மங்கையர்மனம்மயங்கும்
மங்காத அசல் 22கரட்
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
அதுதான்
மகாநதி
ஜுவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1623)

## சமுர்த்தி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஜே/183 கிராம சேவையாளர் பிரிவில் சமுர்த்தி செயலணி அமைப்பொன்று இன்று பிற்பகல் அமைக்கப்படவுள்ளது.

சமுர்த்தி முகாமையாளர் திருமதி ஆ. ஜெயக்குமார் தலைமையில் அண்ணா சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ள இச் செயலமர்வில் உடுவில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆ.ஜெயப்பிரகாசம், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் த.தேவராசா, கிராம அலுவலர் வே.சம்பந்ததாசன், சமுர்த்தி அலுவலர் க. ஜெகதீசன், வலயம் 11ன் சமுர்த்தி முகாமையாளர் க. புஸ்பலோஜினி ஆகியோர் கலந்துகொள்கிறார்கள். (வ)

## சமூகசீரழிவை தடுக்க மகஜர்

தாவடிச்சந்தி, கொக்குவில் பகுதியில், ஆலயமும் மக்கள் குடியிருப்பும் செறிவாக உள்ள பகுதிகளில், கள் விற்பனை செய்தல் மற்றும் கள் அடைத்தல் தொழில், அப்பகுயில் உள்ள ஆலயத்தின் புனிதத் தன்மையை மதிக்காது நடைபெற்று வருகிறது. இதனால் அப்பகுதியில் பல சமூகச்சீரழிவுகளும் அதிகரிக்கின்றன.

மேற்படி சமூகச் சீரழிவைத் தடுக்க உதவுமாறு கோரும் மகஜரொன்று, அப்பகுதி பொதுமக்களின் கையொப்பத்துடன் நல்லூர் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. [இ]

## சிற்றூழியர் நேர்முகத் தேர்வு

யாழ்.மருத்துவமனையில் நீண்ட நாட்களாக நிலவி வரும் சிற்றூழியர் பற்றாக் குறையை நீக்கும் பொருட்டு யாழ்.மருத்துவமனை மேற்கொண்ட முயற்சியின் பயனாக, 150 பேர் சிற்றூழியர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் நேர்முகப்பரீட்சை எதிர் வரும் 30,31 ஆம் திகதிகளில் நடைபெறுமெனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-10)

## 12வது பிறந்த நாள் வாழ்த்து

28-03-2001

**கிருஷ்ணமூர்த்தி ஜனகன்**

கல்வியில் ,ஏற்றமும்
கடவுளில் பக்தியும்

சொல்லெலாம் தூய்மையும்
துலங்கிட என்றுமே

நல்லவர் கருத்தேற்று
நாடு போற்ற என்றுமே

பல்லாண்டு இனிதாக
பாரினில் வாழ்வீரே!

வாழ்த்துவோர்
அம்மம்மா
குடும்பத்தினர்.

நாவற்காடு,
அச்சுவேலி.

[2666]

தங்க நகை உலகில் மங்காப் புகழ்பெற்ற தங்க
ஆபரணங்களின் சொர்க்கபுரி



நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நகுலா நகை மாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(கி-1703)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மார்ச் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.